DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 288/2023** |
| Deposition of Witness for | : | **P.W. 5** |
| Name | : | **ஜெயபாலன்** |
| Father's Name | : | **கருப்பு ராஜா** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | **சார்பு ஆய்வாளர்** |
| Age | : | **42/2026** |

**(வழக்கின் 2 வது எதிரி ஆஜர். 1-ம் எதிரி ஆஜர் இல்லை. 1-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 13.07.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தேவகோட்டை தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 26.09.2022 ம் தேதி சிவகங்கை நகர் காவல்நிலையத்தில் பணிபுரிந்து வந்தபோது அன்றைய தேதியில் காலை சுமார் 6.00 மணியளவில் நான் மற்றும் முநிக.ஜெகதீஸ்வரன், முநிக.சிலம்பரசன் மற்றும் காவலர் முத்துக்கிருஷ்ணன் ஆகியோருடன் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றத்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சிவகங்கை நகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ரோந்து சுற்றி கண்காணித்து வந்தபோது சாமியார்பட்டி விலக்கு ரோட்டில் வடக்கு நோக்கி காலை சுமார் 7.00 மணியளவில் வந்தபோது சந்தேகத்திற்கு இடமாக வந்து கொண்டிருந்த Swift Dzire

WEB COPY

வாகனத்தை தடுத்தி நிறுத்தி தணிக்கை செய்தபோது அந்த வாகனத்திலிருந்து எங்களுக்கு ஏற்கனவே தெரிந்த நகர் காவல்நிலைய சரித்திர பதிவேட்டில் உள்ள சங்கரபாண்டியன் என்ற சங்கர் என்ற குட்டைசங்கர் மற்றும் அவருடன் வந்த நபரின் தற்சமயம் ஞாபகமில்லை.

2. சங்கரபாண்டியன் என்ற சங்கர் என்ற குட்டைசங்கர் என்பவர் வாகனத்திலிருந்து வாளுடன் இறங்கி ஆபாசமாக பேசி உங்களை எல்லாம் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி எனது கழுத்தை நோக்கி இத்தோடு செத்து தொலைடா என்று சொல்லி வெட்ட வந்தபோது நான் சுதாரித்து விலகிவிட்டேன். நான் மட்டும் விலகாமல் இருந்தால் கழுத்தில் வெட்டுப்பட்டு தலை துண்டாகி இறந்திருப்பேன். அப்போது சங்கரபாண்டியன் என்ற சங்கர் என்ற குட்டைசங்கர் வாகனத்தை ஓட்டி வந்த மற்றொரு நபரிடம் இவனுகளை வண்டியை ஏற்றிக்கொல்லுடா என்று சொன்னவுடன் அந்த நபர் வாகனத்தை எடுத்து ஏற்ற முயற்சித்தபோது என்னுடன் வந்த போலிஸ் பார்ட்டி அவர்களை சுற்றி வளைத்து தடுத்து நிறுத்தி பிடித்து எதிரி சங்கரபாண்டியன் என்ற சங்கர் என்ற குட்டைசங்கர் மற்றும் வாகனத்தை ஓட்டி வந்த நபர் மற்றும் சங்கர் கையில் வைத்திருந்த வாள் ஆகியவற்றுடன் நிலையம் வந்து எதிரிகள் மீது நிலையக்குற்ற எண்.381/2022 பிரிவு 294 பி, 353, 307, 506(2) இதச மற்றும் பிரிவு 25 (1A) Arms Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3** ஆகும். சம்பவ சமயம் 1வது எதிரி வைத்திருந்த **வாள் அ.த.பொ.சா.1** ஆகும். எதிரிகள் சம்பவ சமயம் பயன்படுத்திய காரை காட்டக்கூடிய புகைப்படம் **அ.த.சா.ஆ.4** ஆகும். வழக்கு கொலை முயற்சி வழக்கு என்பதால் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சம்பவ நேரத்தில் எதார்த்தமாக வாகன தணிக்கை செய்தோமா என்றால் ரோந்து சென்று வாகன தணிக்கை செய்தோம். வாகன தணிக்கைக்கு முன்பு பல வாகனங்களை நிறுத்தி சோதனை செய்தோம் என்றால் சரிதான்.

WEB COPY

அவ்வாறு நாங்கள் நிறுத்தி சோதனை செய்த வாகனங்களை வழக்கு பதிவு செய்யவில்லை. மானாமதுரை - தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் தான் சோதனை செய்தோம். நாங்கள் மானாமதுரை - தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் மேற்குபக்கம் சோதனை செய்தோம். நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. 1, 2 எதிரிகளை கைது செய்யும் அதிகாரம் எனக்கு உள்ளது. எதிரிகளை அன்றைய தினம் நான் கைது செய்யவில்லை. வாள் மற்றும் கார் கைப்பற்றியதற்கான அத்தாட்சி நான் தயார் செய்யவில்லை.

2. கார் யாருக்கு சொந்தமான கார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி கார் வந்தது என்றால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி கார் வந்தது என்ற விபரத்தை முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளேன். ஆய்வாளரிடம் சம்பவம் நடந்த இடத்தை நான் சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவயிடம் வாணியங்குடி செல்லும் கிழக்கு ரோட்டில் நடந்ததாக வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவத்தில் எனக்கும் என்னுடன் வந்த நபர்களுக்கும் எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். வாகனத்தை நிறுத்தியவுடன் காரின் சாவியை நாங்கள் யாரும் எடுக்கவில்லை. நான் வாகனத்தை இயக்கி எதிரிகளை அதே வாகனத்தில் நிலையம் அழைத்து வந்தேன். சம்பவத்திற்கு முன்பே 1வது எதிரி சங்கரபாண்டியன் என்ற சங்கர் என்ற குட்டைசங்கரை தெரியும். சாட்சி தாமாக 2ம் எதிரியின் பெயரை ராகேஷ் என்று குறிப்பிட்டு அவரை தனக்கு ஏற்கனவே தெரியும் என்று சாட்சியம் அளிக்கிறார்.

3. 2 வது எதிரியின் முகவரி தெரியுமா என்றால் ஞாபகமில்லை. போலிசார் பார்டியில் 2 பேர் என்னுடன் காரில் வந்தார்கள். நாங்கள் சம்பவயிடத்திற்கு இரண்டு வாகனத்தில் சென்றோம். எங்களது வாகனத்தை நிறுத்திவிட்டு பின்பு சென்று எடுத்தோம். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்போது ஆய்வாளர் அங்கு இருந்தார். அப்போது மணி சுமார் 8.30 இருக்கும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சுமார் 10 நிமிடம் ஆகுமா என்றால் ஆகும். முதல் தகவல் அறிக்கையை மேல்

VERDICTUM

விசாரணைக்கு ஒப்படைத்தேனா என்றால் சுமார் 8.30 மணிக்கு ஒப்படைத்தேன். காவல்நிலையத்திற்கும் நீதிமன்றத்திற்கும் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும் என்றும் அரை மணி நேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். 8.30 மணிக்கு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மாலை 6.15 மணிக்கு தான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. கைப்பற்றுதல் மகஜரில் என்னுடன் ரோந்து சென்ற போலிசாரோ அல்லது நானோ கையொப்பம் செய்யவில்லை என்றால் போலிசார் கையொப்பம் செய்தார்களா என்று எனக்கு தெரியாது, நான் கையொப்பம் செய்யவில்லை. காரிலிருந்து வாளை எடுத்துச்சென்று காவல்நிலைய பொறுப்பில் ஒப்படைத்தேன். நான் ஆய்வாளர் விசாரணையில் இந்த வாளை காண்பித்தேனா என்றால் காண்பிக்கவில்லை, வாள் இருக்கும் விபரத்தை சொன்னேன் அப்போது மணி காலை சுமார் 8.31 இருக்கும். காவல் நிலையத்தில் கேட்பாரற்று கிடந்த கார் மற்றும் வாளை எடுத்து எதிரிகள் மீது பொய்யான வழக்கு பதிவு செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் தயார் செய்த அத்தாட்சியின் படி காரோ, வாளோ எதிரிகள் வைத்திருந்து அவர்களிடமிருந்து கைப்பற்றவில்லை என்றும் காவல்நிலையத்திற்கு முன்பு வைத்து தான் கைப்பற்றப்பட்டது என்றால் அத்தாட்சி தயார் செய்த விபரம் எனக்கு தெரியாது. எதிரி எதிரி சங்கரபாண்டியன் என்ற சங்கர் என்ற குட்டைசங்கரின் மீது பல வழக்குகள் உள்ளதால் எனது மேலதிகாரியின் யோசனையின் பேரில் 1வது எதிரி யை சிறையில் அடைக்க வேண்டும் என்பதற்காக பொய் வழக்கு பதிவு செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. நான் சொன்னது போல் சொன்ன தேதி, சொன்ன நேரத்தில் ரோந்து செல்லவில்லை என்றும் 2வது எதிரி இந்த காரை இயக்கவும் கிடையாது என்றும் 1வது எதிரி வாள் வைத்து கொலை மிரட்டல் செய்யவில்லை என்றும் சொன்னால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால்

WEB COPY

சரியல்ல.

**2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**மறு விசாரணை:** இல்லை

**/Sd./S. Mohana Ramya,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**சிவகங்கை.**

WEB COPY